புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 35. TML1174 - நீதி இலக்கியம் கூறும் பெண்ணறம்

செ. செல்லமுத்து,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
ஸ்ரீ வாசவி கல்லூரி ஈரோடு.

**முன்னுரை :**

சங்க இலக்கியங்கள் தோன்றிய காலத்தை சங்க காலம் என்று அழைக்கப்பட்டது. சங்க காலம் என்பது கி .பி இரண்டு முதல் மூன்றாம் நூற்றாண்டு வரையுள்ள காலம் ஆகும்.

மூன்றாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஏற்பட்டகளப்பிரர் காலமான கி.பி ஏழாம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரையிலான கால கட்டத்தை சங்கம் மருவிய காலம் என்று அழைத்தனர்.

சங்க காலத்திலேயே புத்த மதமும்.,சமணக் கோட்பாடுகளும் ஓரளவு தலைத்தோன்றின மன்னர்களுக்கு இடையே நிலவிய போரும் பூசலும், கலை, பண்பாடு,நாகரீகத்திற்க்கு சிதைவையும்,இழப்பையும் ஏற்படுத்தின.

இதனால் மொழி கலப்பினாலும் கலை இலக்கிய நோக்கிலும். அரசியலிலும் ஏற்பட்ட சிக்கலினாலும் களப்பிரர்கள் காலத்தை இருண்ட காலம் என்றனர். இதனை நீதி நூற்காலம், அறஇலக்கியக் காலம். என்று அழைக்கப்பட்டன.

**அறம் என்பது :**

அறம் என்ற சொல்லை எழுப்பினால் அதற்கு விடை காண்பது கடினமானது. அறம் என்ற சொல்லின் பொருள் அறு என்ற வினைச்சொல் அடியாகப் பிறந்ததே ‘அறம்’ ஆகும். இச்சொல்லுக்கு “அறுத்துச் செல்”, வழியை உண்டாக்கு வழியை ஏற்படுத்து, வேறுபடுத்து என்ற பலவகைப் பொருள்கள் வருகின்றன. இச்சொல்லை ஆய்வின் அடிப்படையில் அறம் என்ற சொல்லுக்கு, கீழ்காணும் வகையில் விளக்கம் கூறலாம்.

மனிதன் தனக்கென வரையறுத்துக்கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதி மற்றும் முழுமையான வடிவமே அறம் என்று கூறுவர். அதாவது பிறவிதோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வருகின்ற தீவினையை அறுத்தெறிவதே அறம் என்று ஆன்மீக முறையில் விளக்கம் கூறுவது உண்டு.

எல்லாவற்றிக்கும் மேலாக சொல்வோமானல் மனிதனுக்கு தவறு செய்ய வாய்ப்பு இருந்தும் அவன் அத்தவறைச் செய்யாமல் இருப்பது தான் அறம் எனக் கூறுவோம்.

**தமிழ் நூல்களில் அற இலக்கியம் :**

தமிழ் இலக்கியம் முழுவதுமே அற இலக்கியம் தான். சங்க இலக்கியம், காப்பியங்கள், அற நூல்கள், சிற்றிலக்கியங்கள். புராணங்கள் என்றெல்லாம் பலவகையாக பிரித்தாலும் அவற்றின் அடிப்படையே அறம்ஆகும்.

சங்க இலக்கியங்களும் அறம் உணர்த்துவனவே என்பதை நம்மால் காணமுடிகின்றன. காப்பியங்களும் இவ்வாறே அமைய பெற்றுள்ளன.

“அரசியலில்தவறு செய்தவர்களுக்கு அறமே கூற்றாகும்”. (அதுவே எமனாக அமையும்)என்று உணர்த்துகின்றன.

அறநூல்களைச் சிறந்த இலக்கியங்களின் வரிசையில் வைத்துப் பாராட்டுவது தமிழன் மரபு, ஆங்கிலம் முதலிய பிறமொழிகளில் அறநூல்கள் இலக்கியமாகக் கருதப்படுவதில்லை.

*இலக்கியம் என்பது மானுட அனுபவங்களை உரைப்பதாக இருக்க வேண்டும். வெறுமனே போதனை செய்வதாக இருக்க வேண்டும் என்றல்ல.*

*மக்களுக்கு ஒழுக்க நீதிகளை அறிவுறுத்துவதற்காக எழுந்தவையே நீதிநூல்கள் ஆகும்.*

*இப்படிநோக்கும் போது நாம் அறநூல்களைப் பற்றிப் பெருமைப்படக் காரணம் பதினெண் கீழ்க்கணக்கில் பதினொரு அறநூல்கள்ஆகும். நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை , பழமொழி, சிறுபஞ்சமூலம்,முதுமொழிக்காஞ்சி ஏலாதி என்று அற இலக்கிய நூல்களாக சொல்லப்படுகின்றன. இவற்றில் அறம், பொருள், இன்பம், என்ற முப்பொருளையும் கூறும் நூல்கள் இரண்டு திருக்குறள்,நாலடியார் ஆகும்.*

**அறத்தின் வினை:**

*“அறம் என்பது “மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுல நீர பிற”(குறள்–34) என்று வள்ளுவர் கூறுவது போல,அறம் என்பது நன்மையான செயல்களை செய்வது ஆகும். தன்னை போல பிறரையும் நேசித்தல் என்பதே அறம். அறத்தை செய்வதை விட மேலான நன்மை தருவது எதுவும் இல்லை.*

*ஒருவர் செல்லும் அறவழி அவருக்கு மட்டும் இல்லாமல் அனைவரையும் வாழ வைக்கிறது.*

*அறத்தை வாழ்வியலாக வைத்து வாழ்பவர்கள் இன்பமாக உண்மையாக வாழ்கிறார்கள் மற்றவர்களுக்கு உதவுவதில் மன நிறைவாக மகிழ்ச்சியாக உணர்ந்து கொடுக்க வேண்டும். என்பதையும் உள்ளம் மகிழ்ந்து, கொடுத்தல் நல்ல சிறப்பையும் வாழ்வையும் அமைப்பதாக வள்ளுவர் கூறுகின்றார்*

*பிறருக்கு கொடுப்பதினால் இன்பமாக மகிழ்ச்சியாகவாழ வழிவகை செய்கிறது அறம்.*

*தலைவனும், தலைவியும் தன் குடும்பத்திற்கு மட்டும் இல்லாமல் பிறருக்கும் உதவி செய்பவர்கள். தானும் இன்புற்று. மாற்றவரையும் இன்புற்று வாழ்வது அறவாழ்வு ஆகும். தனக்காக வாழ்வது. வாழ்க்கை அல்ல பிறரையும் நம்மில் ஒருவரே என நினைத்து அறத்தை செய்து வாழ்வதே நல்ல அறம் என்று கூறுகின்றது. இல்லை என்று வருபவர்களுக்கு இல்லை என்று மறுக்காமல் . இருப்பவற்றை ஈவதே சிறந்த அறம் ஆகும்.*

‘‘அறிவதறிந்தடங்கி அஞ்சுவ தஞ்சி
உறுவ துலகுவப்பச் செய்து –பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது’’ (நாலடி –74)

*என்ற பாடலின் மூலம் அறியலாம்.*

**பெண்மையை போற்றும் அறம்:**

*சங்க இலக்கியத்திலேயே ஆண் மேலாண்மை சமூகம் வலிமையுற ஆரம்பித்தது. இதன் தாக்கம். அற இலக்கியங்களிலும் வெளிப்படுகின்றன, அற இலக்கியங்கள் முன்மொழியும் துறவு, ஆண்களின் ஆன்மா மோட்சம் பெற தடைகளாகப் பெண்கள் என்று புனைந்து காட்டப்படுகிறது.*

*உலக பொதுமறையான திருக்குறளில் திருவள்ளுவரும் அறம் என்பது இரு பாலினத்தவருக்கும் சமம் என்று குறிப்பிடுகின்றார்.*

*சங்க இலக்கியத்தில் கூட குடும்பம் என்ற அமைப்பை உருவாக்குவதற்கு ஒருத்திக்கு ஒருவன் என்ற கோட்பாடு தான் முன் மொழியப்படுகின்றன*

*மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய உறுதிப் பொருள்களில் அறம் என்ற ஒன்றை செய்தாலே போதும் வாழ்வில் மற்ற மூன்றும் தானே நம்மை வந்து சேரும்.*

*அறவழியில் பொருளை ஈட்டி இன்பம் பெற வேண்டும். அதன் மூலம் வீடுபேற்றை அடைய முடியும் என்ற சான்றோர் கருத்துக்களை உணர முடிகின்றன அறம் என்பது வெறும் வார்த்தையல்ல அது வாழ்க்கை.*

அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃது
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று (குறள் –33)

*என்னும் குறளில் வள்ளுவர் மெய்ப்பிக்கிறார். அறன் என்று சொல்லக் கூடியதே இல்வாழ்க்கை தான். ஆனால் இல்வாழ்க்கை வாழ்பவன் துறவறம் மேற்கொண்டவரை இகழ்ந்து விடக்கூடாது. பிறரை குறைக்கூறாமல் இகழாமலும்வாழ்வதே சிறந்த இல்லறமாகும்.*

**மனையாளின் கடமை:**

*மனைவி எனப்படுபவர் பற்றி காரியாசான் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. குடும்பத்தை நடத்தும் பொறுப்பு முழுவதும் பெண்களைச் சேர்ந்தது என்ற கருத்தையே நிலைநிறுத்துகிறார் .இதனை*

வருவாய்க்குத் தக்க வழக்கு அறிந்து, சுற்றும்
வெருவாமை வீழ்ந்து விருந்து ஓம்பித்– திருஆக்கும்
தெய்வத்தையும் எஞ்ஞான்றும் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு (சிறு பஞ்சமூலம் –43)

*என்ற பாடலில் தம் கணவனுடைய வருமானத்தின் அளவைத் தெரிந்து கொள்ளவேண்டும். அந்த வருமானத்திற்குத் தகுந்த அளவிலே செலவு செய்ய வேண்டும். உறவினர் மேல் சீறி விழாமல் அவர்களை அன்புடன் உபசரிக்க வேண்டும். விருந்தினர்களை உபசரிக்க வேண்டும். செல்வத்தைக் கொடுக்கும் தெய்வத்தை எந்நாளும் வணங்க வேண்டும். இவைகளே பெண்களின் சிறப்பாகும் என்று சிறுபஞ்சமூலம் அறிவுறுத்துகின்றன.*

குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டு அழகும்
மஞ்சள் அழகும் அடிகல்ல– நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுவுநிலைமையால்
கல்வி அழகே அழகு. (நாலடி –131)

*என்ற பாடலில் தலைமயிரின் அழகும், வளைந்து கொடுக்கும் துணியின் கரையழகும். மஞ்சள் பூசிக் கொள்வதினாலும் உண்டாகும் அழகும் அழகல்ல. உள்ளத்திலே நாம் நல்ல வழியில் நடக்கிறோம். நடுவு நிலைமையில் வாழ்கிறோம் என்னும் குற்றமற்ற நிலைமையினை உண்டாக்கும் கல்வியின் அழகுதான் சிறந்த அழகு என்று நாலடியார் கூறுகிறது.*

*வீட்டிலிருந்து கொண்டு இல்லறத்தை நன்றாக நடத்த வேண்டுவது தான் பெண்கள் கடமை . ஆயினும் அவர்களும் கல்வி கற்றிருக்க வேண்டும், ஆண்களுக்கு நிகராக பெண்களும் கல்வி கற்கும் உரிமை பெற்றார் என்பது உண்மையாகிறது.*

*ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்க்கை. நடத்துவதே இல்லறம்.இல்லறம் என்பதற்கு "இல்லத்திலிருந்து செய்யும் அறம்" என்று செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகரமுதலி பொருள் தருகின்றது. கணவனும், மனைவியும் இதிலிருந்து வேறுபட்டுவாழ்வது சரியாகாது என்பதனை.*

ஒப்ப முடிந்தால் மனை வாழ்க்கை இனிது (இனி . நாற்–3)

*என்று பூதஞ்சேந்தனார் இல்லற இனிமையை உணர்த்துகின்றார்.*

அறனென்ப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று ((குறள்– 49)

*அறம் என்று சொல்லப்பட்டவை. இல்வாழ்க்கையாகும். அதுவும் மற்றவர் பழிக்காத வண்ணம் மனைவியுடன் வாழ்வதே இனிமையுடையதாக கொண்டு சொல்லப்பட்டது.*

*பெண்கள் கற்புடன் வாழ்வதே சிறந்தது. கணவனுடன்இணைந்து இல்லறம் மேற்கொள்ளும் மனைவி கற்புடன் . இருத்தல் இன்றியமையாதது.அவ்வாறு இல்லையென்றால் அவளை விட்டு நீங்கி வாழ்தல் இனிமை பயக்கும். மணவிலக்கு வழக்காறு இல்லாத அக்காலத்தில் கற்பு இல்லாத பெண்ணை நீக்கி வாழ்ந்தனர் என்பதை இனியவை நாற்பது கூறுகின்றது.*

காதல் மனையாளும் காதலனும் மாறுயின்றி
தீ தழல் வருகருமம் செய்பவே (இனி. நாற்–6)

*இல்லறம் நடத்தும் தலைவி நற்குணங்கள் கொண்டவளாகவும். கற்பு நெறியுடனும் இருத்தல் வேண்டும் தன்னையும் கணவன், சுற்றத்தாரையும் காத்து குடும்பத்திற்கு எந்த இழுக்கும் நேராவண்ணம். செம்மையான முறையில் இல்லறம் நடத்த வேண்டும். அவனின் கற்பு நிலை தலையாயது.*

"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பெனும்
திண்மை யுண்டாகப் பெறின். ((குறள் –54)

*என்ற குறள் கூறுகின்றது.*

*அணி என்ற சொல்லுக்கு அழகு என்பது பொருளாகும். சிறப்பாள விளைநிலத்திற்கும், நீர் நிறைந்த குளத்திற்கும் அழகுகளாக நெல்லும், கரும்பும், தாமரைப்பூக்களும் என்று கூறி பெண்ணுக்கு அழகு என்பது வெட்கத்தை மையப்படுத்தியுள்ளன.*

நிலத்துக்கு அணிஎன்ப நெல்லும் கரும்பும்
குளத்துக்கு அணிஎன்ப தாமரை – பெண்மை
நலத்துக்கு அணி என்ப நாணம் தனக்கு அணியாம்
தான்செல் உலகத்து அறம். (பாடல் –11)

*என்ற பாடல் மூலம் நான்மணிக்கடிகை கூறுகின்றன.*

*அற இலக்கியங்கள் பெண்கணவனுக்கு மாறுபடாது நடத்தல்,கணவனின் குறிப்பறிந்து நடத்தல், கற்புடையவளாகநாணுடையவளாக இருத்தல், இவையேபெண்ணறமாகப் போதிக்கபட்டன. இந்த பண்பாட்டு கருத்தியலுக்குக் கீழ்ப்படிகின்ற பெண்களுக்குத் தெய்வீகப் புனைவுகள் ஏற்ப்பட்டன.*

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொடுதெதுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை. (குறள்–55)

*இக்குறளில் கற்பு வலியுறுத்தப்பட்டுள்ளது. அதாவது கொழுநனிடம் கற்புடைய மகளிர் பெய் என்றால் மழை பெய்யும் என்னும் கருத்தியலை வள்ளுவர் கூறுகின்றார் .*

**முடிவுரை:**

*ஆணும், பெண்ணும் அன்பினால் பிணைக்கப்பட்டு ஒழுகுதல் வேண்டுமேயன்று அச்சத்தாலும், ஆவல் கொண்டு ஒன்றிணைந்து வாழ்வது அடிமையான வாழ்வு என்கிறார் வள்ளுவர்.*

அன்பின் வழியது உயர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு (குறள் –80)

*என விளக்குகிறார். அன்பின் வழியாகக் கொண்டு வாழ்பவனே உயிருள்ள மனிதனாவான் . அன்பு இல்லாது வாழ்பவன் வெறும்எலும்புகளைப் போர்த்தியிருக்கும் தோலை உடையஉடம்பு மட்டுமே, அதாவது செத்த உடலுக்கு சமம்என்கிறார்.*

*இவ்வாறு அறத்தின் வழிநின்று அன்பு செலுத்தும். பெண்கள் இந்தசமூகத்திற்கு கிடந்த வரம். எனவே அறந்தோடு நின்று அன்பு செலுத்தும் பெண்மையைப்போற்றுவோம்.*

**துணை நூல் பட்டியல்:**

1. நீதி நூல்கள் – ந.மு.வேங்கடசாமி நாட்டார்
2. நீதிக்களஞ்சியம் – புலவர்.குழந்தை